# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 13768/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www. tneo.gov.in


**முன்னிலை : ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல் முறையீட்டு மனு எண். 7 / 2016**

திரு. குமாரசாமி,
த/பெ சிவலிங்க கவுண்டர்,
மணியம்பட்டு கிராமம்,
கொங்கரப்பட்டு அஞ்சல்,
செஞ்சி வட்டம்,
விழுப்புரம் மாவட்டம் 604 306. . . . .மேல்முறையீட்டாளர்

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
விழுப்புரம் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
பழைய பவர் ஹவுஸ் ரோடு,
விழுப்புரம் – 605 602. . . . . . . எதிர்மனுதாரர்

**ஆணை நாள் : 26–2–2016**

1. திரு. குமாரசாமி, த/பெ சிவலிங்க கவுண்டர், மணியம்பட்டு கிராமம், செஞ்சி வட்டம் அவர்களின் 25.1.2016 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.7 /2016 ஆக பதிவு செய்யப்பட்டது.

2. திரு. குமாரசாமி அவர்களின் வீட்டிலுள்ள மின்இணைப்பு எண்.180, அவரிடம் அந்த வீட்டை விற்பனை செய்த திரு. மாரி அவர்களின் பெயரிலுள்ளது என்றும் அவர் வீட்டை வாங்கி 9 வருடங்களாக அங்கு குடியிருந்து வருவதாகவும் ஆனால், மின்இணைப்பின் பெயர் மாற்றப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார். மேலும், திரு. மாரி அவர்கள் அவரின் மீது விதிக்கப்பட்ட மின்திருட்டு சம்பந்தமான அபராதத்தொகையை செலுத்தவில்லை என்பதால் மின்சார வாரியம் திரு. மாரியின் பெயரிலுள்ள மேல்முறையீட்டாளரின் வீட்டிலுள்ள

மின்இணைப்பு எண்.180–ஐ 16.9.2015–ல் மின்துண்டிப்பு செய்துள்ளது. மேல்முறையீட்டாளர் திரு. மாரி செலுத்தவேண்டிய அபராதத்தொகையை கட்டவில்லை என்று மேல்முறையீட்டாளரின் வீட்டிலுள்ள மின்இணைப்பு எண்.180–ஐ மின்துண்டிப்பு செய்துள்ளதால் மேல்முறையீட்டாளரின் பெயரில் வேறு மின்இணைப்பு வழங்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

3. மேற்கண்ட முறையீட்டு மனுவின் நகல் மேற்பார்வை பொறியாளர், விழுப்புரம் மின்பகிர்மான வட்டம் அவர்களுக்கு அனுப்பப்பட்டு இசைவிணக்கம் எதுவும் ஏற்படவில்லையெனில் பதிலுரையை சமர்ப்பிக்கும்படி 2.2.2016 நாளிட்ட மின்குறைதீர்ப்பாளரின் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது.

4. மேற்பார்வை பொறியாளர், விழுப்புரம் மின்பகிர்மான வட்டம் அவர்கள் தன்னுடைய 22.2.2016 நாளிட்ட கடிதத்தில் திரு. குமாரசாமி அவர்களுக்கு மின்துண்டிப்பு செய்யப்பட்ட மின்இணைப்பு எண்.180, மணியம்பட்டு, 15.2.2016ல் மறு மின்இணைப்பு வழங்கப்பட்டுவிட்டது என்று தெரிவித்து அது சம்பந்தமாக மனுதாரர் அளித்த கடிதத்தின் நகலையும் இணைத்து அனுப்பியுள்ளார்.

5. மேல்முறையீட்டாளர், திரு. குமாரசாமி அவர்கள் தன்னுடைய 17.2.2016 நாளிட்ட, மேற்பார்வை பொறியாளர், விழுப்புரம் மின்பகிர்மான வட்டம் அவர்களுக்கு முகவரியிட்ட மனுவில் தன்னுடைய மின்இணைப்பு எண்.180/மணியம்பட்டு 15.2.2016ல் மறு மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ளதால் தன்னுடைய மேல்முறையீட்டு மனுவை திரும்ப பெற்றுக் கொள்வதாக தெரிவித்துள்ளார். அந்த மனுவின் சம்பந்தப்பட்ட பத்தி மனுவிலுள்ளவாறு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“ xxx xxx xxx*

*xxx xxx xxx*

*இந்நிலையில் மேற்பார்வை பொறியாளர், விழுப்புரம் மின்பகிர்மான வட்டம், விழுப்புரம் அவர்களின் உத்தரவின் பேரில் எனக்கு மேற்படி வீட்டு மின்இணைப்பு எண்.180/ மணியம்பட்டு–ஐ 15.2.2016 அன்று மொடையூர் உதவி மின்பொறியாளர் அவர்களால் மறு மின்இணைப்பு வழங்கப்பட்டது. நான் தற்போது மேற்படி மின்இணைப்பை அனுபவித்து*

*வருகிறேன் என்பதை மகிழ்ச்சியுடன் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், என்னுடைய குறை, மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தால் தீர்த்து வைக்கப்பட்டது. எனவே, என்னுடைய மேல்முறையீடு மனுவை திரும்ப பெற்றுக் கொள்கிறேன் என இதன் மூலமாக தங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.''*

6. மேற்கண்ட மனுவில் மேல்முறையீட்டாளர் அவருடைய குறை மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தால் தீர்த்து வைக்கப்பட்டது என்று தெரிவித்து அவருடைய மேல்முறையீட்டு மனுவை திரும்ப பெற்றுக்கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளதால், மேல்முறையீட்டு மனு எண்.7/2016 தள்ளுபடி செய்யப்படுகிறது என்று மின்குறைதீர்ப்பாளரால் தீர்வு செய்யப்படுகிறது.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

பெறுநர்
**1)** திரு. குமாரசாமி,
த/பெ சிவலிங்க கவுண்டர்,
மணியம்பட்டு கிராமம்,
கொங்கரப்பட்டு அஞ்சல்,
செஞ்சி வட்டம்,விழுப்புரம் மாவட்டம் **604 306.**

**2)** மேற்பார்வை பொறியாளர்,
விழுப்புரம் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
பழைய பவர் ஹவுஸ் ரோடு, விழுப்புரம் **– 605 602.**

**3)** தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
விழுப்புரம் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
பழைய பவர் ஹவுஸ் ரோடு, விழுப்புரம் **– 605 602.**

**4)** தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
**144**, அண்ணாசாலை, சென்னை – **600 002.**

**5)** செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். **19A**, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – **600 008.**

6) உதவி இயக்குநர் (கணிணி) – **இணைய தளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.